



விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் அனுமந்தை ஊரட்சியில் கனமழையினால் தாழ்வானப் பகுதியில் வசித்து வந்த இருளர் இன மக்களை மீட்டு அரசு மேல்நிலைப் பள்ளியில் தங்க வைக்கப்பட்டு இருந்தனர். இவர்களை உயர் கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் நேரில் சந்தித்து அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தனர். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் புகழேந்தி, டாக்டர் லட்சுமணன், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி, மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய சேர்மன் தயாளன், துணைச் சேர்மன் பழனி உள்ளனர். மேலும், மரக்காணம் பேரூராட்சிக்குட்பட்ட மண்டபாய் புதுகுப்பம் பகுதியில் குடியிருப்பு இடங்களில் தேங்கியிருந்த மழை நீரை பொக்லைன் இயந்திரம் மூலம் வெளியேற்றியதை அமைச்சர் மஸ்தான் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### வங்கக் கடலில் உருவான

# மிக்ஜாம் புயலால் மரக்காணம் பகுதியில் கனமழை!

## அமைச்சர்கள் க.பொன்முடி – செஞ்சி மஸ்தான் ஆய்வு!

மரக்காணம், டிச. 7-

வங்கக்கடலில் உருவான மிக் ஜாம் புயலால் கடந்த நான்கு நாட்களாக மரக்காணம் மட்டும் சுற்றுப்புற பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது இந்தப் புயலின் காரணமாக கடலோரப் பகுதிகளில் கன மழையுடன் பலத்த தரைக் காற்று வீசும் என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது. இதன் காரணமாக விழுப்புரம் மாவட்டத்தில் மரக்காணம் பகுதி கடற்கரை ஓரம் அமைந்துள்ளதால் பொது மக்கள்மற்றும்மீனவர்களுக்கு பாதிப்புகளை உண்டாக்காத வகையில்முதலமைச்சரின் உத்தரவுப்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வருவாய்த்துறை உள்ளாட்சித் துறை காவல் துறை நெடுஞ்சாலை துறை தீயணைப்பு துறை உள்ளிட்ட அதிகாரிகள் மீனவ கிராமங்களில் இருந்து மக்களை பாதுகாப்பாக புயல் பாதுகாப்பு மையங்களில் தங்க வைத்தனர். இதே போல் மழை மற்றும் புயலால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்கும் வகையில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தயார் நிலையில் வைத்திருந்தனர். இந்நிலையில் மிக் ஜாம் புயல் நாளை ஆந்திர மாநிலம் நல்லூர் பகுதியில் கரையை கடக்கும் என வானிலை ஆய்வாளர்கள் கூறி உள்ளனர் இந்த புயலின் காரணமாக மரக்காணம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது இந்த கனமழை காரணமாக தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியுள்ளது இது போல் தேங்கியுள்ள மழை நீரை பேரூராட்சி பணியாளர்கள் மற்றும் அதிகாரிகள் உடனடியாக வெளியேற்றி வருகின்றனர். இந்நிலையில் மரக்காணம் பகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட அனுமந்தை உள்ளிட்ட பகுதிகளில்உயர் கல்வித்துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அனுமந்தை ஊராட்சியில் உள்ள 53க்கும் மேற்பட்ட இருளர் இனமக்கள் அங்குள்ள அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை அமைச்சர்கள் க.பொன்முடி, செஞ்சி மஸ்தான் நேரில் பார்வையிட்டு அவர்களுக்குத் தேவையான உணவுகளையும் வழங்கினர். மேலும் அவர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி கொடுத்தனர் மேலும் அவர்களுக்கு மருத்துவ குழுவினர் முகாமிட்டு தேவையான சிகிச்சை அளித்து வருகின்றனர். இதனைத் தொடர்ந்து மரக்காணம் பேரூராட்சி மண்ட வாய் குப்பத்தில்வீட்டின் அருகில் தேங்கிய மழை நீரை ஜேசிபி இயந்திரம் மூலம் அகற்றும் பணியை அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.முன்னதாக மரக்காணம் வட்டாட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள பேரிடர் மையத்தையும் ஆய்வு செய்து அங்கிருந்து பொதுமக்களிடம் குறைகளையும் கேட்டறிந்தார். இதனைத் தொடர்ந்து மரக்காணம் பேரூராட்சியில் உள்ள தொலைபேசி எண்ணையும் சோதனை செய்து அதிலிருந்து பொதுமக்களிடம் பேசினார் அப்போது அதிகாரிகளிடம் கன மழையால் ஏற்படும் சிறிய பாதிப்புகளை கூட உடனடியாக சரி செய்ய வேண்டும் பொதுமக்கள் கூறும் குறைகளை உடனுக்குடன் சரி செய்ய வேண்டும் இது போல் குடிநீர் ஜெனரேட்டர் பொக்லைன் இயந்திரம் போன்றவர்களையும் தயார் நிலை வைத்திருக்க வேண்டும் எனஅமைச்சர் செஞ்சி மஸ்தான் உத்தரவிட்டார். இதில் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பழனி, கூடுதல் ஆட்சியர் ஸ்வத் ஜெய் நாராயணன் சார் ஆட்சியர் தமிழரசன், விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய சேர்மன் தயாளன், துணை சேர்மன் பழனி, மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், மரக்காணம் வட்டாட்சியர் பாலமுருகன்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருவேங்கடம், ராமு,பேரூராட்சிதலைவர் வேதநாயகி ஆளவந்தார், பேரூராட்சிசெயல் அலுவலர் முருகன், மாவட்ட கவுன்சிலர் புஷ்பவல்லி குப்புராஜ் வருவாய் துறையினர் பொதுப்பணித்துறையினர் மீன்வளத் துறையினர் நெடுஞ்சாலைத்துறையினர் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் உடன் இருந்தனர்.

அப்போது அமைச்சர் செஞ்சி மஸ்தான் செய்தியாளர்களிடம் கூறுகையில் முதலமைச்சர் உத்தரவின் பேரில் விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் பகுதியில் அனைத்து முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளையும் அரசு அதிகாரிகள் செய்து உள்ளனர் இங்கு தொடர்ந்து கன மழை பெய்து வருவதால் ஒரு சில இடங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது இவைகளையும் உடனடியாக ஊழியர்கள் வெளியேற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் இதுபோல் வண்டிபாளையம் ஆர்த்தி குப்பம் கிராமங்களுக்கு இடையேயான பக்கிங்காம் கால்வாயில் உள்ள தரைப்பாலம் முழுகி உள்ளது

இந்த பாலத்தை மேம்பாலமாக அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் இதுபோல் பல இடங்களில் சிறிய தரைப்பாளர்கள் முழுகி உள்ளது இந்த பாலங்களை எல்லாம் சரி செய்ய வேண்டுமென ஆய்வுக்கு செல்லும் இடங்களில் பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர் அவரின் கோரிக்கையை ஏற்று சிறிய பாலங்களை உடனடியாக சரி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும் இதுபோல் மழையின் காரணமாக பொதுமக்களுக்கு பாதிப்புகள் ஏற்பட்டால் அவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கும் வகையில் மருத்துவ குழுவினரும் தயார் நிலையில் உள்ளனர் எனவே பொதுமக்கள் இயற்கை பேரழிவு பற்றி கவலை கொள்ள தேவையில்லை என கூறினார்.



சோழ மண்டல தளபதி என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் கோசி.மணி அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஆடுதுறையில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அன்னாரது திருஉருவப்படத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு. ஞானவேலன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன், ப.முருகமணி, ஞான.இமையநாதன், எம்.அப்துல்மாலிக், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோசி.மதி. திருமாவளவன், பொதுக்குழு உறுப்பினர் பி.சிவதாஸ், குத்தாலம் ஒன்றியக் குழு தலைவர் மகேந்திரன் மற்றும் வி.எஸ்.என்.செந்தில் உட்பட பலர் உள்ளனர்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சி. வாசு**

**டிசம்பர் 7 (2014)**



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஆயிரம்விளக்கு பகுதியில் வட்டக் கழகப் பொறுப்பாளர், மாவட்டப் பிரதிநிதி, பகுதி துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

சென்னை துறைமுக அறக்கட்டளை உறுப்பினராகவும், தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



நாகை மாவட்டம் நாகை அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த பிரகாஷ் என்பவரது விசைப்படகு கடுவையாறு முகத்துவாரம் அருகே கடலில் மூழ்கி சேதம் அடைந்தது. இதையடுத்து விசைப்படகு உரிமையாளருக்கு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் ஆகியோர் நிதி உதவி வழங்கினார்கள். உடன் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில மீனவர் அணிச் செயலாளர் ஜி.மனோகரன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, நாகை வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சிக்கல் என்.ஆனந்த் மற்றும் பலர் உள்ளனர்.

# லஞ்ச ஊழல் ஒழிப்புத் துறைக்கு எந்தத் துறையும் விதிவிலக்கல்ல!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, டிச.7-

புதுக்கோட்டையில் நடைபெற்ற உலக மாற்றுத் திறனாளிகள் தின விழாவில் கலந்துகொண்ட தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில்:-

லஞ்ச ஊழல் ஒழிப்புத் துறைக்கு எந்த துறையும் விதி விலக்கல்ல, யார் தவறு செய்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் அல்லது சட்டத்தின் முன்பு நிறுத்தப்படுவார்கள் என்பதற்கு தற்போது நடைபெற்றுள்ள அமலாக்கத்துறை சம்பவம் ஒரு எடுத்துக்காட்டு, யார் எந்த உயர்ந்த நிலையில் இருந்தாலும் உயர் பதவியில் இருந்தாலும் அவர்கள் கையும் களவுமாக பிடிக்கப்படும் பொழுது சட்டத்தின் முன்பாக நிறுத்துவது கடமை. இதில் தமிழ்நாடு முதலமைச்சருடைய அரசு துணிச்சலோடு செயல்பட்டுள்ளது.

அமலாக்கத்துறை மீது தொடர்ந்து இது போன்ற தகவல் கிடைத்தால் அங்கு சென்று லஞ்ச ஒழிப்புத் துறை நடவடிக்கை மேற்கொள்ளும், இது என்றைக்கும் நடந்து கொண்டுள்ள நடவடிக்கை தான்.

தமிழ்நாடு முதலமைச்சர் தெளிவாக கூறியுள்ளார் அமலாக்கத் துறையை வைத்து அல்லது வேறு யாரை வைத்து மிரட்டினாலும் எந்த மிரட்டலுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் உடைய அரசு பணியாது, அஞ்சாது. நேர்மையாக நடக்கும் நாங்கள் துணிச்சலாக செயல்படுவோம் என்று தெளிவாக எடுத்துச் சொல்லியுள்ளார். யாரைக் கண்டும் அஞ்சுகின்ற இயக்கம் தி.மு.க. கிடையாது. சபாநாயகர் அப்பாவு தைரியமானவர் அவருக்கு வந்த மிரட்டலை அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி மீது நடவடிக்கை எடுக்க ஆளுநருக்கு அனுப்பப்பட்டுள்ளது அவர் திரும்பி அனுப்பியுள்ளார் அவர் என்ன காரணத்திற்காக திரும்பி அனுப்பினாரோ, அதற்கான விளக்கங்களோடு மீண்டும் திருப்பி அனுப்பப்படும்.

பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் ஒரு ஊழல்வாதி என்று தொடர்ந்து விமர்சனம் செய்து வந்த நிலையில் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி உள்ளிட்ட சில அமைச்சர்களின் வழக்கை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. இதுகுறித்த கேள்விக்கு நாங்கள் நீதித்துறை மீது வைத்துள்ள மரியாதைக்கும் மதிப்புக்கும் எங்களுக்கு கிடைத்திருக்கின்ற மிகப் பெரிய வெற்றி. ஏனென்றால் நீதிமன்றங்கள் உயர் நீதிமன்றம் உச்ச நீதிமன்றம் வரை சென்று ஒவ்வொன்றிலும் விடுதலை பெற்று வந்துள்ளோம். இதை உடனடியாக நினைவுபடுத்தி விரைந்து முடிக்க உதவிய பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலைக்கு நன்றி.

அமலாக்கத்துறை வழக்கை சி.பி.ஐ.யிடம் ஒப்படைக்க வேண்டுமா அல்லது லஞ்ச ஒழிப்புத்துறையே தொடர வேண்டுமா என்பதை தமிழ்நாடு முதலமைச்சர் முடிவு செய்வார்.

அமலாக்கத்துறை அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத் துறை சோதனை நடத்தும் போது ஏன் மத்திய தொழிற் பாதுகாப்பு படையினரை அங்கு குவிக்க வேண்டும். ஒரு அறையில் மட்டும் ஏன் அவர்கள் சென்று பார்க்க வேண்டும். மடியில் கனமில்லை என்றால் வழியில் பயம் இருக்கக் கூடாது. லஞ்ச ஒழிப்புத்துறை வந்த உடனே எதுவும் இல்லை என்றால் சோதனை நடத்திக் கொள்ளட்டும் என்று அவர்கள் விட்டிருக்க வேண்டியதுதானே, மடியில் கனம் இருந்தால் வழியில் பயம் இருக்கத்தான் செய்யும்.

பா.ஜ.க.கூட்டணி கட்சிகளில் அமலாக்கத் துறையும் ஒன்று என்று தமிழ்நாடு முதலமைச்சர் தொடர்ச்சியாக கூறி வந்தார். நானும் பல பேட்டிகளில் கூறியுள்ளேன் அமலாக்கத்துறை பா.ஜ.க.வின் கூட்டணி கட்சி தான் என்று தெரிவித்தார்.

# நெல்லூர் சாலையில் கடும் வெள்ளம்: 4 அடி உயரம் தண்ணீர்!

அமராவதி, டிச. 7 -

ஆந்திர மாநிலம் நெல்லூர் மாவட்டத்தில் மிச்சாங் புயல் காரணமாக கடந்த 2 நாட்களாக கன மழை பெய்தது. இதனால் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கடும் வெள்ளம் சென்னை - நெல்லூர் தேசிய நெடுஞ்சாலையில் பல பகுதிகள் நீரில் மூழ்கியது.

திருப்பதி மாவட்டம் சூலூர்பேட்டை அருகே உள்ள கோகுல் கிருஷ்ணா என்ஜினியரிங் கல்லூரி அருகே தேசிய நெடுஞ்சாலையில் 4 அடி உயரத்துக்கு வெள்ளநீர் செல்கிறது. மேலும் சூலூர்பேட்டை சுங்கச்சாவடி அருகே உள்ள கலங்கிய ஆற்றில் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் வெள்ளம் தேசிய நெடுஞ்சாலையில் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த வெள்ளத்தின் காரணமாக சென்னை நெல்லூர் இடையே போக்குவரத்து துண்டிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து போலீசார் சாலையில் இருபுறமும் நின்று வாகனங்களை தடுத்து நிறுத்தினர்.

நெடுஞ்சாலையில் வாகனங்கள் நிறுத்தப்பட்டதால் போக்குவரத்து முடங்கியது.

அனைத்து வாகனங்களும் சூலூர்பேட்டை சுங்கச்சாவடியில் இருந்து திருப்பி விடப்பட்டன.

தேசிய நெடுஞ்சாலையின் ஓரத்தில் உள்ள பல ஓடைகள் நிரம்பி, அருகில் உள்ள கிராமங்களை மூழ்கடித்தன. பல இடங்களில் தாழ்வான பாலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சென்னை - நெல்லூர் சாலையில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதால் வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி விடப்படுகின்றன.

இந்த வழியாக யாரும் பயணம் செய்ய வேண்டாம் என திருப்பதி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு பரமேஸ்வர் தெரிவித்துள்ளார்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சித்தமல்லி ந.சோமசுந்தரம்**

**டிசம்பர் 7 (2022)**



இளமைப் பருவத்திலேயே திராவிடர் கழகத்தில் இணைந்து பணியாற்றி, கழகம் துவங்கியவுடன், அதில் தன்னை இணைத்துக் கொண்டு சித்தமல்லி கிளைக் கழக அமைப்பை முதன்முதலாக உருவாக்கி, அதன் செயலாளராக பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

கிளைச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட அவைத்தலைவர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

1967, 1971 ஆகிய இரு முறை கழக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். பல்வேறு கூட்டுறவு சங்கம் மற்றும் அறங்காவலர் குழு தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட பல போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**